# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## இலக்கம் 737 – 1992 ஒக்டோபர் 16 ஆம் வெள்ளிக் கிழமை - 1992.10.16

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## I V (அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


பக்கம் பக்கம்
ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் - பதவி – வெற்றிடங்கள் 1352
ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் - தேர்வுகள், தேர்வு முடிவுகள் போன்றவை -மற்றைய நியமனங்களும் பிறவும் - கேள்வி கோரும் அறிவித்தல்கள் 1354
மாகாண சபை அறிவித்தல்கள் 1336 மூட்டை முடிச்சுக்களை விற்பனை செய்தல் - மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் - நானாவித அறிவித்தல்கள் -


*க.வே. – (i) மாத்தறை அஹதியா சங்கம் (கூட்டுத்தாபனமாக்கல்) சட்ட வரைவு மற்றும் அத்திடிய மன்த்ரீ முள்ளை ஸ்ரீ தர்மாசோக விகாரஸ்தான சபையை (கூட்டுத்தாபனமாக்கல்) சட்ட வரைவு, 1992 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் ii ஆவது பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) தேசிய திறைசேரி முறிகள் (திருத்தப்பட்ட) சட்ட வரைவு மற்றும் வன விலங்குகள் மற்றும் வன பாதுகாப்பு (திருத்தப்பட்ட) சட்ட வரைவு, 1992 மே மாதம் 08 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் ii ஆவது பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(iii) இலங்கை செய்திகள் வாசிப்பாளர்களின் சங்கம் (கூட்டுத்தாபனமாக்கல்) சட்ட வரைவு மற்றும் பிலியந்தலை தர்ம ஷாஸ்ரோதய பிரிவென் விகாரை அபிவிருத்தி சபை (கூட்டுத்தாபனமாக்கல்) சட்ட வரைவு 1992 மே மாதம் 14 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் ii ஆவது பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(iv) இலங்கை சனநாய சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தில் 1992 இலக்கம் 9 உடைய காண்பார்வை இழந்தவர்களை புணருத்தாபனம் செய்யும் நிதிய சட்டம்இ 1992 இலக்கம் 10 உடைய இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தப்பட்ட) சட்டம் மற்றும் 1992 இலக்கம் 11 உடைய கூட்டுறவு சங்க (திருத்தப்பட்ட)*

*சட்டம், 1992 மார்ச் மாதம் 06 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் ii ஆவது பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்படுகிறது. .*

---

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைகளின் ஒவ்வொரு பகுதிக்கும் பிரதான பக்கத்தில் ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், பிரசுரிக்கப்படும் வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் வெள்ளிக் கிழமை தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணிக்கு நிறுத்தப்படும். பதவி-வெற்றிடங்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள், ஏல விற்பனை தொடர்பான விளம்பரங்கள் என்பவற்றில் குறிப்பிடப்படும் இறுதித் திகதியும் நேரமும் அதற்கு பொருத்தமாக அதாவது விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகுவதற்கு அனுப்பப்படும் சகல அறிவித்தல்களும் இவர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 1992, ஒக்மோபர் மாதம் 23 ஆந் திகதி பிரசுரிக்கப்பட வேண்டிய வர்தத்தமான பத்திரிகைக்கு செல்லவேண்டிய அறிவித்தல்கள் 1992 ஒக்டோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அரசாங்க அச்சகத்துக்கு கிடைக்கக் கூடியவாறு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*1992 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி,*
*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8.*

*நெவில் நாணயக்கார,*
*அரசாங்க அழுத்தகர்.*

---

*குறிப்பு இலக்கம் – சா/எம்/பி/03/05*

*சபரகமுவ* **மாகாண** *சபை*

### சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குதல் (திருத்தப்பட்ட) வரைவு பிரதி நியதிச்சட்டம்

இங்கு கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குதல் (திருத்தப்பட்ட) வரைவுப் பிரதி நியதிச்சட்டம் இந்த வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திகிதியிலிருந்து பத்து நாட்கள் கடந்தபின் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் முன்வைக்கப்படும் என அறிவிக்கின்றேன். எவரேனும் ஒருவருக்கு இந் நியதிச்சட்டத்தில்; உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி முன்வைக்க ஏதேனும் கருத்துக்கள் இருந்தால் அவை அந்த பத்து நாட்கள் கால எல்லைக்குள் என்னிடம் முன் வைக்க வேண்டும்.

அபேரத்ன பண்டார ஹேரத் பிலபிடிய,
முதலமைச்சர்.
சபரகமுவ மாகாண சபை.

### மாகாண சபை (சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குதல் ) வரைவு பிரதி நியதிச்சட்டம் (திருத்தப்பட்ட) இலக்கம் 1992

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சபரகமுவ மாகாண சபை மூலமாக இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது.

02. இந் நியதிச்சட்டம் 1992 இலக்கம் 1 உடைய மாகாண சபை (சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள்வழங்குதல்) வரைவு பிரதி நியதிச்சட்டம் (திருத்தப்பட்ட) என அறிமுகப்படுத்தப்படும்.

1989 இலக்கம் 02 உடைய மாகாண சபையின் (சம்பளங்கள் மற்றும் கொடுப்பணவுகள் வழங்குதல்) நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

(1) 2 ஆவது சரத்துநீக்கப்பட்டு அதற்கு பதிலாக கீழ்குறிப்பிடப்பட்டுள்ள சரத்து ஆதேசம் செய்யப்படுகிறது:-

(2) 1992.06.01 ஆம் திகதி முதல் மற்றும் அதன் பிறகு -

(அ) சபரகமுவ மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் தலைவரின் மாதாந்த வேதனம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா ஐந்தாயிரம் (5000.00) மும்.

(ஆ) சபரகமுவ மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு அங்கத்தவர்கள் ஒருவரினது மாதாந்த வேதனம் மற்றும் கொடுப்பனவூகள் ரூபா நான்காயிரம் ரூ (4000.00)

வும் கொடுக்கப்படல் வேண்டும்.

10 – 134

---

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சபகரகமுவ மாகாணத்திலே மாகாண சபையிலே 1990 இலக்கம் 08 உடைய சபரகமுவ

## மாகாணத்திலே வியாபார பெயர்கள் பற்றிய நியதிச்சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள்

1992 ஜூலை மாதம் 10 ஆம் திகதி திகதியுடைய இலக்கம் 723 உடைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் iv (ஆ) எனும் பகுதியில் வெளியிடப்பட்ட 1990 இலக்க 08 உடைய சபரகமுவ மாகாணத்திலே வியாபார பெயர்கள் தொடர்பான நியதிச்சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு கீழுள்ள 2 ஆவது தலைப்பின் கீழுள்ள (7) ஆவது சரத்து "சபரகமுவ மாகாணத்தின் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள் பிரதி வியாபார பெயர் பதிவாளர்களாக மற்றும் கைத்தொழில் போக்குவரத்து மற்றும் வணிக அமைச்சின் செயலாளர், மேலதிக வியாபார பெயர்கள் பதிவாளராக நியமிக்கப்படுவார்.

எச்.ஆர். ஜயதிலக பொடிநிலமே,
கைத்தொழில் போக்குவரத்து மற்றும்
வணிக அமைச்சர்

இரத்தினபுரி சபரகமுவ மாகாண சபையில்,
கைத்தொழில் போக்குவரத்து மற்றும் வணிக அமைச்சிலே.

*10-273*

எனது இலக்கம்: மபச/ஏ/12/90(Xii)

## மத்திய மாகாண சபை

மேற் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்டம் *1991* ஆம் வருடம் நவம்பர் மாதம் *26* ஆந் திகதி மத்திய மாகாணத்திலே சபை கூட்டத்தின் போது ஏகமனதாக சபை அங்கீகாரத்தை பெற்றதுடன்இ இலக்கம் ஜிசிபி/ஏஸ்/3 மற்றும் *1992* ஆம் வருடம் ஜனவரி மாதம் *08* ஆந் திகதியுடைய கடிதத்தின் மூலம் அதற்கு மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்பதனை இத்தாள் அறிவிக்கின்றேன்.

ஜீ.ஆர். ரணசிங்க
சபைச் செயலாளர்,
மத்திய மாகாண சபை.

*1992* ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் *17*ஆந் திகதி,
மத்ததிய மாகாண சபை செயலாளர் காரியாலயம்,
த.பெ. *92,*
பல்லேகல,
குண்டசாலை.

**மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் *1990* ஆம் ஆண்டு *14* ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரகடனம்**

**மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்காகவும், மத்திய மாகாண கூட்டுறவு சங்க ஊழியர்களுக்காக விஷேட ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் மேலதிக காரணிகள் தொடர்பாக ஏற்பா+டுகள் வழங்குவதற்குமான பிரகடனமாகும்.**

**மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரகடனம்**

மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்காகவும் , மத்திய மாகாண கூட்டுறவு சங்க ஊழியர்களுக்காக விஷேட ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் மேலதிக காரணிகள் தொடர்பாக ஏற்பாடுகள் வழங்குவதற்குமான பிரகடனமாகும். இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் மூலம் இது இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது.

01. இந்தப் பிரகடனம் ஆனது இலங்கையில் மத்திய மாகாண சபையிலே 1990 ஆம் ஆண்டு 14 ஆவது இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரகடனம் என அறிமுகப்படுத்த முடியும் என்பதுடன், மத்திய மாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்ற தினத்திலிருந்து இது செல்லுபடியாகும்.

பெயர் மற்றும் திகதி

02. அமைச்சர் அவர்கள் மூலம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும் ஆணையின் படி :-

கூட்டுறவு சங்கம் இப்பிரகடனத்தில் முன்னால் வரக்கூடிய ஏற்பாடுகள் மூலம் விடுவித்தல் தொடர்பாக அமைச்சருக்கு உள்ள அதிகாரங்கள்

(அ) அதில் உறுதியாக குறிப்பிடப்பட வேண்டிய ஏதாவதொரு கூட்டுறவு சங்க குழுவொன்று அல்லது,

(ஆ) அவ்வாறு உறுதியாக குறிப்பிடப்பட வேண்டிய ஏதாவதொரு கூட்டுறவு சங்கம்,

இந்தப் பிரகடனத்தில் முன்னால் உள்ளடக்கப்படும் ஏற்பாடுகள் மூலம் விலக்களிக்கப்பட முடியும் என்பதுடன், அதன் படி “கூட்டுறவு சங்கம்” எனும் பிரயோகம் அந்த ஏற்பாடுகளில் ஈடுபடும் எந்தவொரு இடத்திற்கும் இது போன்ற ஆணையொன்று சம காலத்தில் செல்லுபடியாகும் அதிகாரமற்ற கூட்டுறவு சங்கம் என அர்த்தத்தமுடையதாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

## 1 ஆவது பகுதி

03. இந் பிரகடனத்தின் கருமங்களின் பொருட்டு மத்திய மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு என அறிமுகப்படுதத்தப்படுகின்ற மற்றும் அறிந்த அதிகார சபை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

கூட்டுறவு ஆணைக் குழுவை உருவாக்குதல்

04. (1) இச்சரத்தில் முன்னால் வரக்கூடிய ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக் குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

ஆணைக் குழுவின் உள்ளமைப்பு

(2) மாகாணத்தின் முதலமைச்சரின் சம்மதத்துடன் அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று நபர்களை ஆணைக் குழு கொண்டமைந்நதாக இருக்க வேண்டும்.

(3) ஏதாவதொரு நபர் -

(அ). கூட்டுறவூ சங்கத்தின் ஊழியராக அல்லது முன்னால் ஊழியராக: அல்லது

(ஆ). அமைச்சரின் அறிவிற்கு இணங்க, கூட்டுறவு சங்கதத்தின் மூலம் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஏதாவதொரு பிரிவிற்கு உட்படும் நபர்களின் சம்பளம், வேதனம் அல்லது சேவை நிபந்தனைகளை தயாரித்தல்களை குறிக்கோளாக கொண்டுள்ள அல்லது குறிக்கோள்களில் ஒன்றாக கொண்டுள்ள ஏதாவதொரு பணிக்குழுவின் உத்தியோகத்தர் குழாம் சங்கம் ஒன்றின் அல்லது தொழிற் சங்கமொன்றின் அங்கத்தவராக உள்ள நபர் ஒருவராயின் அல்லது

(இ) கூட்டுறவு சங்கம் தொடர்பான சட்டத்தின் படி கூட்டுறவு சங்கத்தின் உத்தியோகத்தராக இருக்கின்ற நபராயின் அல்லது

(ஈ) சம காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவராயின்,

அந்நபர் ஆணைக் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்படல் பொருத்தமற்றதாகும்.

05. ஆணைக்குழு தொடர்ந்து நிலவும் பாரம்பரிய பொது முத்திரையூடைய சட்டக் கூட்டுத்தாபனமாக இருக்க வேண்டியதுடன், அதன் சட்டக் கூட்டுத்தாபன நிலைமைகள் அதன் சார்பாக மற்றும் அதற்கு எதிராக வழக்கு தொடர்தல் மற்றும் வழக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ள அனுமதிப்பதாக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழு சட்ட கூட்டுத்தாபனமாக இருக்க வேண்டும் என்பது

06. ஆணைக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவர்கள் தமது நியமனத் திகதியில் இருந்து மூன்று வருட காலம் பதவி வகிக்க வேண்டும்.

அங்கத்தவர்களின் பதவிக் காலம்

ஆயினும் அவ்வாறான நியமனத்தின் பதவிக் காலத்தை கருத்திற் கொள்ளாமல் –

(அ) அவ்வாறான அங்கத்தவர் ஒருவரின் மூலம் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பதவி விலகவோ அல்லது அமைச்சரினால் அவர் பதவியிலிருந்து விலக்கப்படவோ முடியும். மேலும்,

(ஆ) அவ்வாறான யாதேனும் அங்கத்தவர் ஒருவர் 4 (3) ஆவது சரத்தின் படி தகுதியற்றவரான பின் அக்காரணத்தினால் தனது பதவியிலிருந்து விலக வேண்டும்.

அதேபோல் மேலும் அவ்வாறான உறுப்பினர் ஒருவர் மரணமடைந்தால் அல்லது விலகினால் அல்லது பதவியிலிருந்து விலக்கப்படும் போது அல்லது பதவியை வெற்றிடமாக்கும் போது ஏற்படும் ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்படும் ஏதேனும் நபர் மூலம் தான் நியமிக்கப்பட்டது ஏதாவதொரு அங்கத்தவர் ஒருவருக்கு பதிலாக என்பதுடன் அந்த அங்கத்தவர் பதவிக் காலத்தில் சேவை செய்ய முடியாமல் இருக்கும் பகுதிக்கு சமமான காலம் வரை பதவி வகிக்க முடியும் என்பதுடன் அதற்கு மேற்பட்ட காலம் அப்பதவி வகிக்ககூடாது.

07. (1) அமைச்சர் அவர்களினால் ஆணைக் குழுவின் அங்கத்தவர்களிடமிருந்து ஒருவர் அதன் தலைவராக நியமிக்கப்படல் வேண்டும். தலைவர் சமூகமளித்திருக்கும் சந்தர்பங்களில் ஆணைக் குழுவின் அனைத்து ஒன்று கூடல்களிலும் அவர் தலைமை வகிக்க வேண்டும். ஆணைக் குழுவின் ஏதாவதொரு கூட்டத்திற்கு தலைவர் சமூகமளிக்காவிடின் சமூகமளித்திருக்கும் அங்கத்தவர்களில் இருவரின் சம்மதத்துடன் அவர்கள் இருவரில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் அதன் நடவடிக்கை களை பேணுதல்

(2) ஆணைக் குழுவின் கூட்டமொன்றிற்கு கோரம் இருவராக இருக்க வேண்டும்.

(3) ஆணைக் குழுவின் ஏதாவதொரு கூட்டத்திற்கு அங்கத்தவர் இருவர் மாத்திரம் சமூகமளித்திருந்தால் மற்றும் ஏதாவதொரு பிரச்சினை தொடர்பாக எடுக்கக் கூடிய தீர்மானங்கள் பற்றி அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுமிடத்து அப்பிரச்சினை ஆணைக் குழு அங்கத்தவர்கள் மூவரும் சமூகமளித்திருக்கும் கூட்டமொன்றில் முன்வைக்கப்படல் வேண்டும்.

(4) ஆணைக் குழுவின் அங்கத்தவர்கள் மூவரும் சமூகமளித்திருக்கும் ஏதாவது கூட்டமொன்றில் ஏதாவது பிரச்சினை தொடர்பாக வழங்க வேண்டிய தீர்மானங்கள் பற்றி ஆணைக் குழுவின் அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுமிடத்து அந்த பிரச்சினை சமூகமளித்திருக்கும் அங்கத்தவர்களின் பெரும்பான்மை கருத்துடன் தீர்மானிக்கப்படல் வேண்டும். ஆயினும் அங்கத்தவர்கள் சமமாக பிரிந்திருப்பின் தலைவர் தீர்மான வாக்கெடுப்பொன்று நடாத்த வேண்டும்.

(5) இந்தப் பிரகடனத்திலோ அல்லது அதன் கீழே சட்டமாக்கப்படும் ஏதாவது கட்டளைகளின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படாது இருப்பின் ஏதாவதொரு காரணி தொடர்பாக ஆணைக் குழு மூலம் சுய அலுவல்கள் நிகழ்ச்சி நிரலை ஒழுங்கமைக்க முடியும்.

(6) ஆணைக் குழுவின் அங்கத்தவர்களிடையில் வெற்றிடம் ஒன்று இருக்கும் காரணத்தினால் மாத்திரம் ஆணைக் குழுவினது ஏதாவதொரு செயல்பாடுகள் அல்லது பணியொன்று இரத்து செய்யப்படக் கூடாது.

08. ஆணைக் குழுவின் தலைவருக்கு மற்றும் அங்கத்தவர்களுக்கு மாகாணத்தின் நிதி விடயங்களிற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் அமைச்சரினால் சாத்தியமான ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும்.

அங்கத்தவர்களுக்கு வழங்குதல்

09. (1) ஆணைக் குழுவில் செயலாளர் ஒருவர் இருக்க வேண்டியதுடன், அவர் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

செயலாளர் மற்றும் மற்றய உத்தியோகத்தர்கள்

(2) ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் குழாமில் மிகுதி அங்கத்தவர்கள் மாகாண அரச சேவையிலிருந்து நியமிக்கப்படல் வேண்டும்.

10. (1) ஆணைக் குழுவின் அங்கத்தவர்கள் மூலம் அவர்களது முதல் நியமனத்தின் போது இந்தப் பிரகடனத்தின் உப ஏற்பாட்டில் காட்டப்பட்டுள்ள மாதிரிகளில் சத்தியபிரமாணம் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் ஒன்று செய்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உறுதி மொழி எடுத்தல்

(2) ஆணைக் குழுவின் செயலாளர் மூலம் மற்றும் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் செய்ய வேண்டுமென ஆணைக் குழுவின் தலைவர் மூலம் நியமிக்கப்படக் கூடிய ஆணைக் குழுவின் மிகுதி உத்தியோகத்தர்கள் மூலம் அவர்களது முதல் நியமனத்தின் போது இந்தப் பிரகடன்தின் உப ஏற்பாட்டில் காட்டப்பட்டுள்ள மாதிரிகளில் சத்திய பிரமாணம் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் ஒன்று செய்தல் வேண்டும்.

11. (1) ஆணைக் குழுவிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்

ஆணைக் குழுவிற்கு உரிய அதிகாரங்கள்

( அ) கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படும் முறைகளுக்கு தொடர்புடைய அனைத்து காரணிகள் மற்றும் அவர்களது சேவை நிபந்தனைகள் நியமனத்தின் போது மற்றும் கூட்டுறவு சங்கமொன்றின் அல்லது ஒரு பதவியின் அந்த சங்கத்தின் வேறொரு பதவிக்கு பதவி உயர்வு செய்யப்படும் போது சங்கத்தினால் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை முடிவு செய்தல்.

(ஆ) கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பரீட்சை நடாத்துதல் அல்லது பரீட்சை நடாத்துவதற்கான கருமங்களுக்காக பரீட்சை சபையை நியமித்தல் மற்றும் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணம் அறவிடுதல்.

(இ) அவ்வாறான ஏதாவதொரு பதவிக்கு நியமிக்கபடுவதற்காக தேவையான தகைமைகளை முடிவு செய்தல், ஏதாவதொரு வகுப்பிற்கு அல்லது அதே போன்று ஏதாவதொரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கு இணைக்கப்பட்ட சம்பள திட்டங்கள் விதித்தல், ஆணையாளரை அனுகி அந்த சம்பள திட்டங்களை காலத்திற்கு காலம் திருத்தி அமைத்தல் அல்லது தயாரித்தல் மற்றும் கூட்டுறவு ஊழியர்களின் ஊதியம் மற்றும் சேவை விதிமுறைகளை தீர்மானித்தலின் போது ஆனணக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதங்காக ஆணைக் குழுவின் மூலம் தேவையெனக் கருதக்கூடிய ஆலோசனை அமைப்புகளை நிறுவுதல்.

(ஈ) ஏதாவதொரு வகுப்பபொன்று அல்லது வர்க்கமொன்று ஏதாவதொரு பதவியொன்று அல்லது பதவிகளுக்காக ஆணைக் குழுவினால் விதிக்கப்பட்ட சம்பள அளவு த்திட்டத்தின் பிரகாரம் சம்பளம் வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடல்.

(உ) தமது ஊழியர்களிற்கு எதிராக ஒழுக்காற்று உரிமைகளை பயன்படுத்தும் போது ஏதாவதொரு கூட்டுறவு சங்கமொன்றின் மூலம் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாட்டு முறைமை அல்லது செயற்பாட்டு முறைமைகளை விதித்தல். ஊழியர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆணைக் குழுவினால் விதிக்கப்படுகின்ற கால எல்லைக்குள் நிறைவு செய்யுமாறு கூட்டுறவு சங்கங்களுக்கு விதித்தல் மற்றும் ஏதாவதொரு கூட்டுறவு சங்கமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று கட்டளைக்கு எதிராக எழுகின்ற கோரிக்கைகளை பரிசீலனை செய்தல்.

(ஊ) ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்திற்கு அதன் ஊழியர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட குறிப்புகள் இடுமாறு பணித்தல்.

(எ) ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் ஏதாவதொரு ஊழியர் தொடர்பாக ஆணைக் குழுவிற்கு தேவையாக இருக்கும் கடிதக் கோவை, வேறு ஆவணங்கள் அல்லது தகவல்கள் குறிப்பிட்ட உரிய திகதிக்கு முன்னராக வழங்கும் படியும் அச்சங்கத்திற்கு கூறுதல்.

(ஏ) ஆணைக் குழுவினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக தேவையான விசாரணைகள் முன்னெடுத்து ஆணைக் குழுவிற்கு முன் அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக உத்தியோகத்தர்கள் உள்ளடக்கிய நிர்வாகச் சபை ஒன்றை அல்லது நிர்வாகச் சபைகளை நியமித்தல்.

(ஐ) ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர் ஒருவரினது நடவடிக்கைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் விளைவாக அவ் ஊழியரினால் சங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக ஆணைக் குழுவிற்கு கோரிக்கை விடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் அவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான ஆலோசனை உட்பட அவ் ஊழியர் தொடர்பாக ஆணைக் குழுவினால் வழங்கப்படக் கூடிய ஆலோசனைகளை நடைமுறைபடுத்தும்படி அக் கூட்டுறவு சங்கத்திற்கு பணித்தல்.

(ஒ) ஊழியர்களின் சேவை நிறைவுறும் போது பணிக்கொடை அல்லது வேறு பிரதி இலாபங்களாக அவர்களுக்கு வழங்குதல் தொடர்பாக ஏதாவதொரு கொள்கைகளுக்கு அமைவாக, அக் கொள்கைகளை விதித்தல்.

(ஓ) இந்தப் பிரகடனம் நடைமுறையிலிருக்கும் போது ஏதாவதொரு கூட்டுறவு சங்கம் அல்லது ஏதாவதொரு வகுப்புக்குறிய கூட்டுறவு சங்கத்தை விடுவித்தல் தொடர்பாக ஆணையாளரை அணுகி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும்

(ஔ) மாகாண சபையின் அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சரினால் சட்டமாக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஆணையின் மூலம் ஆணைக் குழுவிற்கு அளிக்கப்படக் கூடிய கூட்டுறவு சங்கங்களிற்கு மற்றும் அதன் ஊழியர்களிற்கு உரிய வேறு அதிகாரங்களை பயன்படுத்துதல்.

(2) (1) ஆவது துணைச் சரத்தின் மூலம் ஆணைக் குழுவிற்கு வழங்கக்கூடிய அதிகாரங்களை பயன்படுத்தும் போது ஆணைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது முடிவுகளையும் அல்லது தீர்மானங்களை எடுத்தல், மாற்றுதல் அல்லது நிராகரித்தல் என்பன ஆணைக் குழுவின் மூலம் மேற்கொள்ள முடியும்.

நிதி ஒதுக்கீடுகள்

12. ஆணைக்குழுவின் செலவினங்கள் ஆண்டுதோறும் மாகாண சபை மூலம் அதற்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 2 ஆவது பகுதி

கூட்டுறவு சங்கங்களை தொழில் வழங்குனர்களாக நினைத்தல்

13. ஏதாவதொரு ஊழியர் ஒருவரின் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் சங்கத்தின் நிதியிலிருந்து உண்மையான நேரத்தில் வழங்கும் கூட்டுறவூ சங்கமொன்று அவ் ஊழியரின் தொழில் வழங்குனராக கருதப்படும்.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் விதிறைகளுக்கு அடிபணிய வேண்டும் என்பது

14. கூட்டுறவு சங்கம் மற்றும் சங்கத்தின் எந்த ஊழியராக இருப்பினும் இந்தப் பிரகடனத்தின் கீழ் ஆணைக் குழு மூலம் மேற்கொள்ள முடியுமான கட்டளைகளுக்கு உட்பட வேண்டுமென்பதுடன் இந்தப் பிரகடனத்தின் கீழ் ஆணைக் குழுவின் கருமங்கள் மற்றும் அதிகாரங்கள் நிறைவேற்றுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்களில் ஆணைக் குழுவின் அனைத்து தீர்மானங்கள் 11 (2) ஆவது சரத்தின் நடவடிக்கைகளுக்கு உட்பட்டு நிறைவு பெற வேண்டியதுடன் அமைச்சரினால் 2 ஆவது சரத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் மூலம் இந்தப் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் விலக்களிக்க முடியாத அனைத்து கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் அந்நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதற்கு கடப்பட்டு இருக்க வேண்டும்.

கூட்டுறவு சங்க ஊழியர் ஆணைக்குழுவினது கட்டளைகளை பின்னற்றுவதற்கு கடப்பட்டிருத்தல்

15. ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் ஏதாவதொரு ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டளைகள் 11 (2) ஆவது சரத்தின் நடவடிக்கைகளுக்கு உட்பட்டு நிறைவு பெற வேண்டியதுடன், அக் கட்டளைகள் அச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக அவ் ஊழியர் அவற்றை பின்பற்ற கடப்பட்டு இருக்க வேண்டும்.

16. (1) இலங்கையின் 1972 ஆம் ஆண்டு இலக்கம் 02 ஆவது கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு கட்டளைச் சட்டத்தின் செல்லுபடியாக இருக்கும் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கூட்டுறவு மாகாண ஆணைக் குழுவிலே சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனுமதிக்கப்பட்டு சட்டமாக்கப்படும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருக்கும்.

(2) கூட்டுறவு சங்கங்களின் தற்போது பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சுய விருப்பின் பேரில் அவர் நியமனம் பெற்ற சந்தர்ப்பத்தில் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த மற்றும் நிபந்தனைகளின் கீழ் மேலும் பணியில் நீடித்திருப்பதற்கு அவரின் விருப்பத்தை தெரிவிக்க முடியும்.

சேவை நிபந்தனை மற்றும் ஒப்பந்தம் பின்னற்றுவதற்கான விருப்பம்

(3) நியமனம் பெற்ற சந்தர்ப்பத்தில் தனக்குறிய சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் மேலும் பணியில் நீடித்திருக்க விரும்பம் தெரிவிக்கும் அனைத்து ஊழியர்களும் , தமது சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டதன் பின் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற பதவி உயர்வை ஏற்றுக்கொண்டால் இவ் ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

(4) ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் சேவை விதிமுறைகள் மற்றும்நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு இச் சரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து தேர்வுகளும் இரத்துச் செய்ய முடியாததாக இருத்தல் வேண்டும்.

17. (1) ஊழியர் ஒருவர் வகிக்கும் பதவியை வகிப்பதற்கு அவரின் ஆரோக்கியம் மற்றும் தகைமை தொடர்பாக பரீட்சையின் மூலம் அல்லது பிற ஒழுங்குகளில் ஆணைக் குழுவை திருப்தி ப்படுத்தும் படி ஆணைக்குழு மூலம் அதன் முழுமையான விருப்பப்படி ஏதாவதொரு ஊழியர் ஒருவருக்கு குறிப்பிட முடியும் . ஆயினும் ஆணைக் குழு மூலம் குறிப்பிட முடியூமானதான ஏதாவதொரு வகுப்பிற்கு அல்லது பிரிவுகளில் ஊழியர்களுக்கு மாத்திரம் இத் துணைச் சரத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்புடையததாக இருக்க வேண்டும்.

இருக்கும் உத்தியோகத்தர்கள் சேவை தகைமைகளை ஆய்வு செய்தல் மற்றும் புதிய சேவை நிபந்தனைகளை விதித்தல்

(2) (1) ஆவது துணை சரத்திற்கு உட்படும் பதவியொன்றை வகிக்கும் நபர் அப் பதவியை வகிப்பதற்கு தனது ஆரோக்கியம் மற்றும் தகைமை தொடர்பாக ஆணைக் குழுவை திருப்திபடுத்த தவறும் சந்தர்ப்பத்தில் ஆணைக் குழுவின் விருப்பப்படி அவரின் திறமைக்கு பொருத்தமான பதவிக்கு அவரின் விருப்பபடி அவரை ஈடுபடுத்துவதற்கு ஆணைக்குழு முயற்சி செய்ய வேண்டியதுடன் , அப்பிரதியீடு மேற்கொள்ளப்படாதவிடத்து அந்த நேரத்தில் அவருக்குப் பொருந்தும் சேவை விதிமுறைகளில் அது பிரதிபலிக்கவில்லை என்றால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நியாயமான ஒத்திவைப்பிற்கு பின் அவர் சேவையில் ஈடுபட்டிருந்த கூட்டுறவு சங்கத்தின் மூலம் அவரின் சேவையை முடிவிற்கு கொண்டு வரும்படி ஆலோசனைக் குழுவின் முன் முழுமையான விருப்பப்படி கட்டளை விதிக்க முடியும்.

(3) (1) ஆவது துணை சரத்தின் பதவியொன்றை வகிக்கும் நபர் ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு தேர்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் (1) ஆவது துணை சரத்தின் நடவடிக்கைகளின் படி அவர் மூலம் ஆணைக் குழு திருப்தி அடையும் பொழுது மற்றும் அவ்வாறு செய்யும் வரை அச் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அவருக்கு உரிமை இருக்க முடியாது.

18. (1) மத்திய மாகாணத்தினுள் ஏதாவதொரு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கமொன்றின் ஏதாவதொரு பதவியின் கீழ் குறைந்தது இரண்டு வருட காலமாவது அந்த மாவட்டத்தினுள் வதிவற்ற ஏதாவதொரு நபரை நியமிக்க கூடாது.

வதிவிடம் தொடர்பான தகைமைகள்

(2) ஆயினும் ஆணைக் குழுவின் விருப்பப்படி ஏதாவதொரு மாவட்டத்தின் ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் ஏதாவதொரு பதவிக்காக தகுதியுடைய உத்தியோகத்தர் ஒருவர் அந்த மாவட்டத்தினுள் இல்லாத விடத்து மாகாணத்தினுள் அமைந்துள்ள மற்றைய மாவட்டங்களில் விண்ணப்பதாரிகளிடமிருந்து தகுதியான நபரை அப்பதவியை பூரணப்படுத்துவதற்காக நியமிப்பதற்கு அச்சங்கத்திற்கு அனுமதியளிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு முடியும்.

19. கூட்டுறவு சங்கத்தின் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட்ட ஏதாவதொரு நபருக்கு அச்சங்கத்தின் வகைக்கு அமைய மற்றும் 29 (1) ஆவது சரத்தின் கீழ் விதிக்கப்படும் ஊழியர்களின் வகைகள் மற்றும் வகுப்பு அடிப்படையில் உரிய சம்பளத் திட்டத்தை வழங்க முடியும்.

ஊழியர் சம்பள அளவுத் திட்டம் சங்க வகைகளின் பிரகாரம் விதித்தல்

20. இப்பிரகடனத்தில் ஏனைய ஏற்பாடுகள் எதனையும் பொருடபடுத்தாமல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிலும் , உரிய நபரின் மற்றும் கூட்டுறவு சங்கத்தினதும் சம்மதத்துடன் அச்சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் அந்த காலப்பகுதிக்கு மற்றும் அந்த கருமங்களுக்கு அந்த சங்கத்தின் சேவைக்கு இரண்டாம் நிலைப்படுத்தப்பட்ட மாகாண சபை அரச சேவையின் நபரொருவர் இச் சங்கத்தின் எந்தவொரு பதவிக்கும் நியமிப்பதற்கு ஆணைக் குழுவிற்கு முடியும்.

அரச சேவையை இரண்டாம் நிலைப்படுத்தல்

21. சகல கூட்டுறவு சங்கத்தின் மூலம் அதன் நிதியிலிருந்து அச் சங்கத்தின் ஊழியர்களினது சம்பளங்களும் ஏனைய கொடுப்பனவுகள் ஏதேனும் இருப்பின் அந்த கொடுப்பனவுகளும் வழங்க முடியும்.

கூட்டுறவு சங்க ஊழியர் சம்பளம்

22. (1) கூட்டுறவு சங்கமொன்றில் அச்சங்கத்தின் ஏதாவதொரு ஊழியர் ஒருவர் அச் சங்கத்தின் ஒரு சேவை நிலையத்தில் ஏதாவதொரு சேவை நிலையத்திற்கு இட மாற்றம் செய்யும் அதிகாரம் இருக்க வேண்டும் என்பதுடன் ஒழுக்காற்று காரணம் தவிர்ந்த ஏதாவதொரு காரணத்தினால் மாற்றம் செய்யும் காரணம் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அந்த மாற்றம் செய்தல் அந்த ஊழியரின் ஊதியம் மீது தாக்கம் விளைவிக்கக் கூடாது.

கூட்டுறவு சங்க ஊழியர் இடமாற்றம்

(2) அந்த அந்த தொழில் வழங்குனர்களின் ஒப்புதலை முன்னதாக பெற்றுக்கொண்டிருப்பின் சமமான தகுதிகளில் பதவி வகிக்கும் இருவரினது ஒன்றிணைந்த வேண்டுகோளின் பிரகாரம் ஒரு கூட்டுறவு சங்கத்தின் ஏதாவதொரு ஊழியர் ஒருவர் வேறொரு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர் ஒருவராக பின்னர் குறிப்பிடபட்டுள்ள கூட்டுறவு சங்கத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம் ஆணைக் குழுவிற்கு இருக்க வேண்டும்.

23. இந்தப் பிரகடனத்தில் அல்லது அதன் கீழ் சட்டமாக்கப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைகளினது ஏற்பாடுகள் பதில் நியமனம் இன்றி ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் மூலம் இக் கூட்டுறவு சங்கத்தின் எந்தவொரு ஊழியரை பணி நீக்கம் செய்தல் அல்லது பிற வழிகளில் அவருக்கு தண்டனை வழங்குதல் கூடாது.

ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் தண்டனைகள் வழங்குதல்

24. (1) ஆணைக் குழு மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏதாவதொரு தொகைக்கு மேலதிகமான தொகையை உத்தரவாதமாக வைக்குமாறு கூட்டுறவு சங்கம் ஒன்றினால் ஏதாவதொரு ஊழியருக்கு பணிக்க முடியாது.

கூட்டுறவு சங்க ஊழியர் உத்தரவாதம்

(2) கூட்டுறவு சங்கத்தின் ஏதாவதொரு ஊழியர் மூலம் வைக்கப்படும் தொகையானது ஏதாவதொரு உத்தரவாதம் சங்கத்தின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்ய வேண்டியதுடன் அதற்கு உரித்தான ஏதாவதொரு வட்டித் தொகையை அவ் ஊழியருக்கு வழங்கவேண்டும்.

25. (1) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் -

ஊழியர்களுக்கு உரிய நியதிகள்

(அ) கூட்டுறவூ சங்கங்களின் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்தல் , நியமனம் செய்தல், பதவியூயர்வு, இடமாற்றம் செய்தல் , அவர்களால் இராஜினாமா செய்தல் மற்றும் அவர்களின் சேவைகளை நிறுத்ததுதல் தொடர்பாக,

(ஆ) ஊழியர்களின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விதித்து மற்றும் சம்பளத் திட்டங்கள், கொடுப்பனவு மற்றும் சேவை பணிக்கொடை , முற்பணம் கொடுத்தல் , பதவி உயர்வு வழங்குதல் விடுமுறை , ஊழியர்களின் சேவையை இடை நிறுத்துதல் , நியமனத்தை நிறைவு செய்தல், சேவையிலிருந்து நீக்குதல் அல்லது அவ் ஊழியர்களிற்கு வேறு வழிகளில் தண்டனைகள் வழங்குதல் மற்றும் அதற்கு எதிராக ஏதாவதொரு கோரிக்கை விடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்தல் மற்றும்,

(இ) அந்த ஊழியரின் சேவை விதிமுறைகள் அல்லது நிபந்தனைகளுக்குறிய தேவையென கருதப்படும் வேறு காரணிகள் தொடர்பாக கட்டளைகளை சட்டமாக்க முடியும்.

2. (1) ஆவது துணை சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு காரணம் தொடர்பாக சட்டமாக்கப்படும் அனைத்து கட்டளைகளையும் பின்பற்றுவதற்கு கூட்டுறவு சங்கம் மற்றும் அதன் ஊழியர்கள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

26. மாகாணத்தினுள் நடைமுறையிலிருக்கும் அனைத்து கூட்டுறவு சங்கங்களின் மூலம் ,

ஊழியர்கள் தொடர்பாக கூட்டுறவு சங்கங்களின் கடமைகள்

( அ) அதன் அனைத்து ஊழியர்கள் தொடர்பாக விதிக்கப்படும் பெயர்பட்டியல் அல்லது குறிப்பு இடப்பட்டு பேண வேண்டியதுடன், அவ் ஒவ்வொரு ஊழியர் தொடர்பாக விதிக்கக் கூடிய அனைத்து விபரங்களும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

( ஆ) அதன் ஊழியர்கள் தொடர்பாக விதிக்கப்படக் கூடிய கால அறிக்கைகள் அல்லது குறிப்புகள் அல்லது ஆணைக் குழுவிற்கு அவ்வப்போது தேவையான தகவல்களை ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டும். மேலும்,

( இ) சங்கத்தின் காரியாலங்கள் மூலம் ஏதாவதொரு காரியாலயத்திற்கு உட்பிரவேசித்து பேணப்படும் புத்தகங்கள், கணக்குக் குறிப்புகள் அல்லது வேறு ஆவணங்கள் ஏதேனும் பரீட்சிப்பதற்கு மற்றும் அதன் பிரதிகளை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படும் ஆணைக் குழுவின் ஏதாவதொரு ஊழியரிற்கு அல்லது அங்கத்தவர் ஒருவருக்கு அவ்வாறு செய்வதற்கு இடமளிக்க வேண்டும்.

27. தொழில் வழங்குனர்களான அனைத்து கூட்டுறவு சங்கங்களும் மற்றும் அச்சங்கத்தின் அனைத்து ஊழியர்கள் மூலம் சட்டத்தினால் விதிக்கப்படும் ஏதாவதொரு தொகையை மாதந் தோறும் உபயமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்க வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம்

28. சேவைக்கு உள்வாங்கப்பட்டது இப்பிரகடனம் சட்டமாக்கிய தினத்திற்கு முன்னராக இருப்பினும் பின்னராக இருப்பினும் அனைத்து ஊழியர்களும் அவர்கள் சேவையை பெற்றுக் கொண்டது ஏதாவதொரு சங்கத்தினால் என்றால் அச்சங்கத்தின் ஊழியர்களா க அச்சங்கத்தின் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் மற்றும் அச்சங்கத்திற்கு பக்கசார்பாக இருக்க வேண்டியதுடன் சந்தேகங்களை தீர்ப்பதற்காக இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

கூட்டுறவூ ஊழியர்கள் ஆணைக்குழு வினது புதிய சங்கத்தின் ஊழியர்கள் என

29. (1) கூட்டுறவு சங்கங்களின் பதவிகளுக்காக சம்பள திட்டங்களை வகுக்கும் கருமங்கள் தொடர்பாக ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களை வகைப்படுத்தும் போது ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்களின் வகைகள் மற்றும் வகுப்புக்கள் மற்றும் அவ் ஒவ்வொரு வகைகளுக்குமான மற்றும் வகுப்புகளுக்குறிய ஊழியர்களின் தொகையை தீர்மானித்தலின் போது தான் தகைமையானவர் என கருதப்படும் விடத்து காலத்திற்கு காலம் அதனை மாற்றும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்க வேண்டும்.

ஆணையாளரினால் சங்கங்கள் வகைப்படுத்தப்பட வேண்டும் என மற்றும் ஊழியர் குழாமை தீர்மானித்தல்

(2) I ஆவது துணை சரத்தின் கீழ் ஆணையாளர் மூலம் மேற்கொள்ளப்படும் முடிவுகளை மீறி எந்தவொரு சங்கம் ஒன்றின் மூலம் எந்தவொரு நபரையும் சேவையில் அமர்த்த முடியாது.

30. ஆணைக் குழு மூலம் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவதொரு பதவிக்கு நியமிக்க தேவையான தகைமைகளை விதித்தல் ஏதாவதொரு வகுப்பிற்கோ அல்லது வர்கத்திற்கோ ஏதாவதொரு பதவிக்காக அல்லது பதவிகளுக்கு சம்பள அளவு திட்டத்தை விதித்தல் , அச் சம்பளதிட்டத்தை திருத்தியமைத்தல் என்பன ஆணையாளரின் சம்மதத்துடன் மேற்கொள்ள முடியும்.

தகைமைகள், சம்பளத் திட்டம் என்பன தொடர்பாக ஆணைக் குழு ஆணையாளரின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டும்

## 4 ஆவது பகுதி

31. இந்தப் பிரகடன ஏற்பாடுகளை செயற்படுத்தும் போது இப் பிரகடனத்தின் எந்தவொரு ஏற்பாட்டையும் அல்லது வெற்றிகரமாக செயல்படு ;தப்படாத ஏதாவதொரு காரணியொன்று அல்லது பிரச்சினை தொடர்பாக ஏதாவதொரு சந்தேகமோ அல்லது சிரமம் ஏற்பட்டால் அமைச்சர் அவர்களினால் கட்டளை ஒன்றின் மூலம் அச் சந்தேகத்தை நீக்க முடியும் என்பதுடன் அவ்வாறான அனைத்து கட்டளைகளும் வர்த்மானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு காரணங்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதற்கு சட்டபூர்வ அதிகாரம் இருக்க வேண்டியது தவிர இங்கு இயற்றப்பட்டபடி செல்லுபடியாகும்.

சிரமங்களை நிவர்த்தி செய்தல்

32. (1) வெளியிடப்பட்ட பிற வழிகளிலான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தாலே தவிர கட்டளைகளை விதிப்பதற்கு இப்பிரகடனத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருப்பது அல்லது நியமிக்கப்பட்டிருப்பது ஏதாவதொரு காரணத்திற்காக அல்லது சம்பந்தமாகவோ அவ் அனைத்து காரணங்கள் மற்றும் இந்தப் பிரகடனத்தில் செய்யப்பட்ட அல்லது வெளிப்படையாக பரிந்துரைக்கப்பட்ட அனைத்து கட்டளைகள் அடங்களாக , இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்படுத்த அல்லது செயல்படுத்துவதற்கு ஆணைக் குழு அவசியம் எனக் கருதும் அனைத்து உத்தரவுகளையும் ஆணைக் குழு விதிக்கலாம்.

ஆணைக்குழு மூலம் கட்டளை கள் பிறப்பிக்க முடியும் என

(2) அவ்வாறான எந்தவொரு கட்டளையும் அமைச்சர் அவர்களின் மூலம் அது அனுமதிக்கப்படும் வரை மற்றும் அவ் அனுமதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் வரை அதிகாரம் அற்றதாக இருத்தல் வேண்டும்.

(3) ஏதாவது அறிவித்தலொன்று ( 2) ஆவது துணை சரத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும் இடத்து அவ் அறிவித்தல் இங்கு இயற்றப்பட்டபடி செல்லுபடியாகும்.

33. ஆணைக்குழுவின் ஏதாவதொரு அங்கத்துவ நபர் மூலம் அவ் அங்கத்தவராக அல்லது சட்டரீதியான கூட்டுத்தாபன நிலையில் ஆணைக் குழு மூலம் எடுக்கப்பட்ட ஏதாவதொரு நடவடிக்கை தொடர்பாக அந்த அங்கத்துவ நபருக்கு எதிராக எந்தவொரு சிவில் வழக்கு , குற்றவியல் வழக்கு அல்லது சிவில் வழக்கு இருந்தால் வேறேதாவது பணிகளை வழங்குதல் அல்லது பேணுதல் செய்ய முடியாது.

ஆணைக்குழுவினது அங்கத்த வர்களின் சுதந்திரம்

34. இந்தப் பிரகடன ஏற்பாடுகளை பொருட்படுத்தாமல் கூட்டுற சங்கம் ஒன்றின் மூலம் அதன் செயல் திறனை மேம்படுத்துவதற்காக:-

( அ) ஆணைக்குழுவின் பூரண அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையின் ஏதாவதொரு குறிக்கப்பட்ட காலத்திற்கு தேர்ச்சி பெற்ற ஒருவரின் அல்லது நிபுணர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல்,

(ஆ) விற்கு அமைய அல்லது நாட் சம்பளம் வழங்கப்படும் ஊழியர்கள் அல்லது துண்டு சம்பளச் சேவை அடிப்படையின் கீழ் சம்பளம் வழங்கப்படும் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

ஆயினும் ஆணைக்குழுவின் சம்மதம் இன்றி அவ்வாறான ஊழியர்களுக்கு பதவியில் எந்தவொரு நிரந்தர சேவையையும் வழங்கக் கூடாது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட அல்லது அமய அல்லது நாட் சம்பளம் பெறும் ஊழியர்களை பணியில் அமர்த்துதல்

35. (1) (அ) இச் சட்டத்தில் ஏற்பாடுகளை மீறுதல் அல்லது,

(ஆ) செய்யும்படி ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் ஏதாவதொரு செயற்பாட்டினை அல்லது இந்தப் பிரகடனத்தில் விதிக்கப்பட்ட கருமங்களுக்காக ஆணைக் குழு அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்படும் பிற நபரொருவர், வழங்குமாறு விதிக்கப்படும் ஏதாவதொரு தகவல் ஒன்றை வழங்குதல் வேண்டுமென்றே கவனயீனமாக அல்லது மறுதலித்தல் அல்லது புறக்கணித்தல். அல்லது,

தவறுகள்

(இ) வேண்டுமென்றே பொய்யான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் அல்லது பொய்யான தகவல்களை வழங்கும் ஏதாவதொரு கூட்டுறவு சங்கமொன்று அல்லது ஏதாவதொரு உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவர் இந்தப் பிரகடனத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படுவர்.

(2) (1) ஆவது சரத்தில் குறிப்பிட்டுள்ள ஏதாதொரு தவறை செய்யும் சகல கூட்டுறவு சங்கங்கள் அல்லது சகல நபர்களும் நீதவான் ஒருவர் முன்னால் இடம் பெறும் குறுகிய வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டால் ரூபா ஆயிரத்திற்கு மேற்படாத தண்ட பணம் செலுத்த வேண்டும்.

(3) இந்த பிரகடனத்தின் கீழேயுள்ள ஏதாவதொரு தவறை கூட்டுறவு சங்கம் ஒன்றின் மூலம் செய்யும் சந்தர்ப்பத்தில் அச் சங்கத்தின் எல்லா உத்தியோகத்தர்களும் அந்த தவறை தமது அறியாமையினால் செய்திருந்தால் அல்லது தவறு இடம் பெறுவதை தவிர்க்கும் பொருட்டு தகுதியான அனைத்து முயற்சிகளிலும் தாம் நடவடிக்கை மேற்கொண்டோம் என்பதனை அவர்கள் மூலம் நிரூபித்தாலேயன்றி அந்த தவறுக்கு குற்றவாளியாக நோக்க வேண்டும்.

(4) ஏதாவதொரு ஊழியர் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ள ஆணைக் குழுவினால் வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் நடந்து கொள்ள தவறுதல் தொடர்பாக கூட்டுறவு சங்கம் ஒன்று குற்றவாளியாக்கப்படும் போது அக்கூட்டுறவுச் சங்கம்,

(i) (2) ஆவது உப சரத்தின் கீழ் அதற்கு விதிக்கப்படக்கூடிய ஏதாவதொரு தண்டனைக்கு மேலதிகமாக அத்தவறு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அப் புறக்கணிப்பை மேலும் நடைமுறைபடுத்தும் ஒவ்வொரு தினத்திற்காக ரூபா ஐம்பது தண்டப்பணம் செலுத்துவதற்கு மற்றும்

(ii) அவ் ஒவ்வொரு தண்டப்பணத்தின் மற்றும் ஆணைக் குழுவினது ஆலோசனை பிரகாரம் அவ் ஊழியர் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய திகதிக்கு முதலாவதாக அக்கூட்டுறவு சங்கத்தின் ஊழியர் குற்றவாளியாக்கப்பட்ட திகதி முடிவடைந்த காலப்பகுதியிலே ஒவ்வொரு தினத்திலும் அவ் ஊழியர் சேவையில் ஈடுபட்டிருந்தால் அவரது சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்காதவிடத்து அவருக்கு உரித்தான சம்பளத்தில் அல்லது வேதனத்தின் அளவின் படி கணக்கிடப்பட்ட அவ் ஊழியருக்கு கொடுப்பணவு செய்வதற்கு பணிய வேண்டும். கூட்டுறவு சங்கமொன்று இந்தத் துணை சரத்தின் ( ii) பந்தியின் கீழ் கொடுப்பனவு செய்யவதற்கு பணியும் ஏதாவதொரு தொகையை அக் கூட்டுறவு சங்கம் குற்றவாளியாக்கப்பட்ட நீதி மன்றத்தின் மூலம் அச்சங்கத்திற்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் அந் நீதிமன்றத்தின் கட்டளையின் கீழ் அறவிட்டுக் கொள்ள முடியும் என்பதுடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகையை அவ் ஊழியருக்கு வழங்க வேண்டும்.

ஆணைக்குழுவினது நடவடிக்கைகளுக்கு தலையீடு செய்தல்

36. தமது கடமையை செய்யும் போது இன்றி சரியான அல்லது தவறாக தன்னால் அல்லது பிற நபரின் வழியில் ஏதாவது விதமாக ஆணைக்குழுவினது ஏதாவதொரு தீர்மானத்தின் மீது ஏதாவதொரு அங்கத்தவர் மீது தாக்கம் செலுத்துவதற்கு முற்படும் எல்லா நபர்களும் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதவான் ஒருவர் முன்னே குறுகிய வழக்கு விசாரணையின் பின்னர் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் ரூபா ஆயிரத்திற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறையில் அடைப்பதற்கு அல்லது இரண்டிற்கும் பணிய வேண்டும்.

அதிகாரமின்றி தகவல்கள் வெளிப்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது என

37. ஆணைக் குழுவின் எந்தவொரு அங்கத்தவர் , ஆணைக் குழுவின் செயலாளர், ஆணைக் குழுவின் உத்தியோகத்தர் குழாமின் ஏதாவதொரு அங்கத்தவர் அல்லது பிற நபரினால் ஆயினும் தமது உத்தியோக பூர்வ காரியங்களை ஆற்றும் போது தவிர்ந்த பிற வழிகளில் தமது கடமைகளை செய்யும் போது தமக்கு தெறிந்து கொள்ள முடியுமான எந்த ஒரு ஆவணம் , நிருபம் வெளியிடல் அல்லது இன்னுமொருவருக்கு வெளிப்படுத்துதல் கூடாது.

ஆணைக்குழுவினது செய்திகள் வரப்பிரசாதம் உடையவை என

38. ஆணைக் குழு அல்லது ஏதாவதொரு அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தர் மற்றும் ஏதாவதொரு கூட்டுறவு சங்கம் அல்லது அக்கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக நிறைவேற்றுக்குழுவின் ஏதாவதொரு அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தர் இடையில் அல்லது ஆணைக் குழுவின் ஏதாவதொரு அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தருக்கிடையில் ஆணைககுழுவின் கருமங்களுகிடையில் ஏதாவதொரு கருமத்தை மேற்கொள்ளும் போது.

சில பிரகடனங்கள் கூட்டுறவூ சங்கங்கள் மூலம் மற்றும் அதன் ஊழியர்களுக்கு உரித்தற்றது என (1) அதிகார சொல் தொடர்பாக

39. ஆணைக்குழுவிற்கு அல்லது அது தொடர்பாக அல்லது தொழில் வழங்குனரா ன ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்திற்கு அல்லது அது தொடர்பாக அல்லது ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்தில் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கும் ஊழியர் ஒருவர் அல்லது கைத்தொழில் பிணக்குச் சட்டம் எதுவும் தொடர்புபடக் கூடாது. இல்லையேல் அவ்வாறு தொடர்புடையது என விளங்கிக் கொள்ளல் அல்லது எண்ணுதல் கூடாது.

40. சொற்கள் தொடர்பாக குறிப்பாகச் சுட்டப்பெற்ற பொருள் தேவைப்படும் போது தவிர இப்பிரகடனத்தில்,

“ஆணைக்குழு” என்பது மத்திய மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு என பொருள்படும்.

“ஆணையாளர்” என்பது மத்திய மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர் என பொருள்படும்.

“கூட்டுறவுச் சங்கம்” என்பது கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மாகாணத்தினுள் நடைமுறையில் இருக்கும் சங்கம் என பொருள்படும். “ஊழியர்;” என்பது இக்கட்டளைச் சட்டத்தின் வரைவிலக்கணப்படி கூட்டுறவு சங்கம் ஒன்றின் ஊழியர்கள் எனப் பொருள்படும்.

“விதிக்கப்படும்” என்பது ஆணைக்குழுவின் மூலம் சட்டமாக்கப்பட்ட கட்டளைகள். “மாவட்டம்” என பொருள்படுவது மத்திய மாகாணத்தினுள் அமைந்துள்ள மாவட்டங்களாகும்.

*"அமைச்சர்"* என்பது இந்த பிரகடனத்தின் கீழ் மத்திய மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி விடயம் தொடர்பான அமைச்சரின் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு நியமிக்கப்பட்ட நபர் என கருதப்படும்.

இந்த பிரகடனத்தை விளங்கிக் கொள்வதில் ஏதேனும் குழப்பங்கள் இருந்தால் ஆங்கில மொழி தழுவலில் தொடர்பாடல், கருத்துக்கள் மற்றும் விளக்கம் தாக்கம் செலுத்தும்.

**ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவரினால் செய்யப்பட வேண்டிய சத்தியப் பிரமானம்**

................................................. ஆகிய நான் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவிலே அங்கத்தவராக நியமிக்கப்பட்டதன் காரணமாக மத்திய மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் தலைவர் / அங்கத்தவர் ஆக அப்பதவியின் நடவடிக்கைகளை பக்கச்சார்பின்றியும், பயபக்தியுடனும், நட்புறவுடன் மற்றும் துவேசமற்ற வகையில் மேற்கொள்வேன் எனவும், அவ்வாறு செய்யும் போது இதற்குரிய எந்த காரணங்களைப் பற்றி எதுவும்இ கடமைக்காக தவிர வேறு நபர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிப்படுத்த மாட்டேன் எனவும் இத்தாள் கௌரவமாகவும் மற்றும் மரியாதையாகவும் உண்மையாகவும் சத்தியப் பிரமானம் செய்கின்றேன் / பிரகடனஞ் செய்கின்றேன்.

1991 ஆம் ஆண்டு …………… மாதம் ………… ஆந் திகதி என் முன்னால் சத்தியப் பிரமானம் செய்யப்பட்டது / பிரகடனஞ் செய்யப்பட்டது

…………………………
உயர் நீதிமன்ற நீதிபதி

**ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவரினால் செய்யப்பட வேண்டிய சத்தியப் பிரமானம்**

................................................. ஆகிய நான் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவிலே செயலாளர் / உத்தியோகத்தர் பதவியின் கடமைகளை மேற்கொள்ளும் போது கடமைக்கு உரியது தவிர, வேறு ஏதாவது சந்தர்ப்பங்களில் எனது கடமை நடவடிக்கைகளில் அறிந்து கொள்ள முடிகின்ற எந்த கடிதத்தில், செய்தியில் அல்லது தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள எந்த வகையிலான விடயம் அல்லது விடயங்களை அல்லது அதில் ஒரு பகுதியை எந்த நபர்களுக்கும் நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிப்படுத்த மாட்டேன் எனவும், இத்தாள் கௌரவமாக, மரியாதையுடன் மற்றும் உண்மையாக சத்தியப் பிரமானம் செய்கின்றேன் / பிரகடனஞ் செய்கின்றேன்.

1991 ஆம் ஆண்டு …………… மாதம் ………… ஆந் திகதி என் முன்னால் / சத்தியப் பிரமானம் செய்யப்பட்டது / பிரகடனஞ் செய்யப்பட்டது.

…………………………………………………….
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்